[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 ஏப்ரல் 1

அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தமிழன் அவர்கள் பேசியபோது, இதே மு.க. ஸ்டாலின், "பத்திரிகையிலே வரக்கூடிய செய்திகளை வைத்துக்கொண்டு பேசுவது முறையல்ல, இதை ஏற்க மாட்டோம்" என்று கூறி அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் செய்தார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவைக் காவலர்கள், லாபியிலே கோஷமிடுவதைத் தடுத்து அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். லாபியில் யாரும் கோஷம் போடக் கூடாது. அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) லாபியில் கோஷமிட வேண்டாம்.*

5. அரசினர் தீர்மானம்

உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. ஜெ. அன்பழகன் ஆகியோரை பேரவைப் பணிகளினின்று இரண்டு நாட்கள் நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவையின் அலுவல்களை நடைபெறவிடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்து, அவைத் தலைவரின் இருக்கைக்கே வந்து அவைத் தலைவருடைய மேசையைப் பலமாகத் தட்டிய, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 121, உள் விதி 2—ன்கீழ் இன்றும், நாளையும் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்யப்பெற வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜெ. அன்பழகனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2013 ஏப்ரல் 1] **[திரு. ஓ. பன்னீர்செல்வம்]**

"பேரவையின் அலுவல்களை நடைபெறவிடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக பேரவைத் தலைவரின் இருக்கைக்கே வந்து அவரது மேசையைத் தட்டி, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்த, திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களும், திரு. ஜெ. அன்பழகன் அவர்களும், சட்டமன்ற பேரவை விதி 121, உள் விதி 2–ன்கீழ் இன்றும், நாளையும் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்யப்பெற வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ்.எஸ் சிவசங்கர் மற்றும் திரு. ஜெ. அன்பழகன் ஆகிய இருவரும் இன்றும் நாளையும், அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதிலிருந்து, தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணாநிதிக்கும், கருணாநிதியின் பிள்ளைகளுக்கும் எப்பொழுதுமே ஒரு குணம் உண்டு. "அவங்க